Written by தமிழரங்கம்
Friday, 27 January 2012 20:59 -

பழுத்த அரிசி, அழுகிய காய்கறிகள், வகோத சோறு, நீ ர்மோர், பருப்பே இல்லாத சாம்பார், தூர்நாற்றமடிக்கும் உணவுக்கூடம் இவதைான் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்கிப் பயிலும் அரசு விடுதிகளின் அவலம். தமிழகத்தில் உள்ள 1238 விடுதிகளில் தங்கிப் பயிலும் 74,302 மாணவர்கள் சுகாதாரமற்ற தரமற்ற இந்த உணவதைான் உட்கொள்ள வேண்டியிருக்கிறது. இதனால் மாணவர்கள் அடிக்கடி வாந்தி, வயிற்றுப் போக்கு மற்றும் பிற தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டு அவதிப்படுகின்றனர்.

திருச்சி அண்ணா விளையாட்டு அரங்கத்தின் அருகிலுள்ள டாக்டர் அம்பதேக்கர் அரசு மாணவர் விடுதியில் தங்கிப் படித்து வரும் 350க்கும் மேற்பட்ட மாணவர்கள் தரமற்ற உணவும் சுகாதாரமற்ற விடுதியும் பற்றி பலமுறை விடுதிக் காப்பாளரிடம் முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கும்றிக் கொண்டிருந்த மாணவர்கள், கடந்த 13.12.2011 அன்று ஜெகெதீ சன், சங்கத்தமிழன் உள்ளிட்ட பு.மா.இ.மு.தோழர்களின் தலைமையில், விடுதியின் அருகேயுள்ள ரஸேக்கோர்ஸ் சாலையில் சாப்பாடு தட்டு மற்றும் பாத்திரங்களுடன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஓரு மணிநேரத்துக்கு போக்குவரத்து பாதிப்புக்குள்ளாகி, மாவட்ட உதவி ஆட்சியர் உள்ளிட்ட அதிகார வர்க்கமும் போலீ சாரும் ஓடோடிவந்து பேச்சு வார்த்தை நடத்தினர். விடுதிக் காப்பாளர் தொடங்கி மலேதிகாரிகள் வரை ஊழலில் ஊறித்திளைப்பதை பேச்சு வார்த்தைக்கு வந்த அதிகாரவர்க்கத்திடம் தலைமையேற்ற தோழர்கள் சாடினர். அரண்டுபோன அதிகாரிகள் இந்நிலைமைகளை சீ ரமைப்பதாகவும், மாணவர்களின் 10க்கும் மேற்பட்ட கோரிக்கைகளை 15 நாட்களுக்குள் நிறைவேற்றுவதாகவும் உறுதியளித்த பிறகே போராட்டம் கைவிடப்பட்டது.

விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட கல்லூரி மாணவ மாணவியருக்கான மாதாந்திர உணவுக் கட்டணத்தை ரூ.750ஆக உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ள பாசிச ஜயொ அரசின் அறிவிப்பு வறெும் பித்தலாட்டம் என்பதயைும், அரசின் சலுகைகள் அதிகரிப்பதற்கறே்ப அதிகார வர்க்கத்தின் ஊழலும் கொள்ளையும் மலேும் அதிகரிக்கவே செய்யும் என்பதயைும் இப்போராட்டம் அம்பலப்படுத்திக் காட்டியது. தமிழகமெங்கும் மாணவர்களிடமும் உழைக்கும் மக்களிடமும் இந்நியாயமான போராட்டத்துக்கு ஆதரவதை் திரட்டிவரும் பு.மா.இ.மு., அடுத்தகட்டப் போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகிறது.

பு.ஜ.செய்தியாளர், திருச்சி.